REGD. NO. M. 6311 ★ தனி இதழ் 0—1—0 ★ இலங்கையில் 10 சதம் ★ PHONE: 55630.

# நம் நாடு

தி. மு. க. தின இதழ் — ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily. ★ The Official Organ Of The D.P.F.

**தி. மு. க. பெற்றுள்ள வெற்றி**

(19—3—57 நண்பகல்வரை)

★

| சட்டசபை : | மக்கள் சபை : |
|---|---|
| 13 | 4 (2 ஆதரவாளர்கள்) |

(பெற்றுள்ள மொத்த வாக்குகள்)

| சட்டசபை : | மக்கள் சபை : |
|---|---|
| 14,27,431 | 11,05,132 |

மலர் 4] சென்னை: பங்குனி 6உ செவ்வாய் (19—3—57) ★ ★ வெளியூர்: பங்குனி 7உ புதன் (20—3—57) [இதழ் 239

# ஏவல்படி ஆடுவராம்! பாடுவராம்!

## தீவிர மாற்றங்கள் செய்யமாட்டார்களாம்!

## 'அற்புத'ங்களைச் செய்யப் போவதில்லையாம்!

### வெளிநாட்டு மூலதன தேசியமய ஏற்பாடு ஏட்டளவில் இருக்குமாம்!

### கேரள கம்யூனிஸ்டு கட்சி பற்றி தகவல்

புதுடில்லி, மார்ச் 18—

"நாங்கள் அற்புதங்களைச் செய்யப்போகிறோம் என, கேரளத்திற்கு வெளியில் உள்ள மக்கள் நம்பிக்கொண்டு இருக்கிறார்கள். தீவிர மாற்றங்கள் மூலம்—அற்புதச் செயல்கள் எதையும் நாங்கள் செய்யப்போவது கிடையாது."

—இவ்வாறு கேரள கம்யூனிஸ்டு கட்சியினரான எம். என். கோவிந்தன் நாயர் அவர்கள், பத்திரிகை நிருபர்களிடம் விளக்கம் தந்துள்ளார்.

அவர் மேலும் கூறியிருப்பதாவது:—

"நாங்கள் அரசியல் சட்டத்தை புறக்கணித்து நடந்துகொள்ளப் போவது கிடையாது. தோட்டக் காடுகளை மத்திய அரசாங்கம் தேசியமயமாக்கத் தீர்மானிக்கும்பட்சத்தில், அதன் விளைவாக நாமும் பயன்பெறுவது சாத்தியமாகும்."

வெளிநாட்டாருக்குச் சொந்தமாக உள்ள இரப்பர் தோட்டக் காடுகளை கம்யூனிஸ்டு அரசாங்கம் தேசியமயமாக்கும் என ஏ. கே. கோபாலன் அவர்கள் கூறிய கூற்றை மறுக்கும்வகையில்,

"அது, மத்திய அரசாங்க அதிகார வரம்புக்குட்பட்ட விஷயமாகும்; ஆனால், மாகாண அரசாங்க அதிகாரவரம்பிற்கு உட்பட்டதாக இருக்கும்பட்சத்தில், நாங்கள் அவைகளை தேசீயமயமாக்குவோம்.

"மக்களின் மத விவகாரங்களில் நாங்கள் தலையிடமாட்டோம்"

என்றும் அவர் குறிப்பிட்டுக் கூறியிருக்கிறார்.

### அரசாங்கம் நிலையிழந்து ஆட்டம்கொடுப்பதேன்?

பிரெஞ்சு அரசியல் சட்டத்தைத் திருத்தியமைக்குமாறு பிரெஞ்சு அசெம்பிளியில் பல உறுப்பினர்கள் வற்புறுத்தியுள்ளனர்.

'பிரெஞ்சு அரசாங்கம் அடிக்கடி நிலையிழந்து ஆட்டம் கொடுப்பதற்கு அடிப்படைக் காரணம் 1946-ல் உருவாக்கப்பட்ட அரசியல் சட்டம்தான்' என்று பல உறுப்பினர்கள் சுட்டிக் காட்டியுள்ளனர்.

### கடல் அளவை நிர்ணயிக்க முயற்சி!

புதுடில்லி, மார்ச் 19—

கடல் அலை, அமைப்பு, இயக்கம், கடல் நீரோட்டம், கடல் பரப்பில் காற்றமுக்கம் முதலிய அம்சங்கள் துல்லியமாக அறியப்பட்டு அந்தத் தகவல்களைக் கொண்டு கடல் அளவு நிர்ணயிக்கப்படுமாம்!

இதற்கான முயற்சியில் பிரிட்டனின் தேசீயக் கடல் ஆராய்ச்சி நிலையம் ஈடுபட்டிருக்கிறது.

## மந்திரி இராமசாமி படையாச்சியின் முடிவு?

சென்னை, மார்ச் 19—

மந்திரி இராமசாமி படையாச்சியின் முடிவு இன்று இரவு 7-மணியளவில் தெரிந்துவிடும்.

நேற்று இரவு வரை, அவர் வெற்றி பெறுவதற்குரிய வாய்ப்பே இல்லை என்பதைக் கூறும் வகையில் நமது கழக அபேட்சகரான கிருஷ்ணமூர்த்தி அவர்களே சுமார் 6,000 வாக்குகள்வரை அதிகம் பெற்றிருக்கிறார் என்று அதிகாரப்பற்றற்ற செய்தி கிடைத்திருக்கிறது.

மொத்தம் உள்ள 196 வாக்குச்சாவடிகளில் 110 சாவடிகளில் வைக்கப்பட்டிருந்த பெட்டிகள் எண்ணப்பட்டுவிட்டன; இன்னும் 86 பெட்டிகளே பாக்கி என்று கூறப்படுகிறது.

இதே நெல்லிக்குப்பம் தொகுதியில் தனியிடத்திற்குப் போட்டியிட்ட தி. மு. கழக அபேட்சகரான ராஜாங்கம் அவர்களும் காங்கிரஸ் அபேட்சகரைவிட சுமார் 3,000 வாக்குகள் அதிகம் பெற்றிருக்கிறார் என்றும் தெரியவருகிறது.

வாக்குப் பதிவு நிலவரங்களையும், எண்ணப்பட்ட வரையில் உள்ள நிலவரங்களையும் வைத்துக் கணக்கிடும்போது, மந்திரி இராமசாமி படையாச்சியின் தோல்வி உறுதி என்றே நெல்லிக்குப்பத்திலிருந்து தகவல் கிடைத்திருக்கிறது.

## 'தேர்தலில் சர்க்கார் தலையிட்டது'

### பஞ்சாப் சட்டசபையில் எதிர்க் கட்சியினர் வெளிநடப்பு

சந்திகார், மார்ச் 18—

"மாநிலத்தில் நடைபெற்ற தேர்தலில் சர்க்கார் தலையிட்டனர்; அத்துடன், சர்க்கார் அதிகாரிகளின் செல்வாக்கும் தவறான வழியில் உபயோகிக்கப்பட்டது"

என்று கூறி, பஞ்சாப் சட்டசபையிலிருந்து பத்து எதிர்க் கட்சி உறுப்பினர்கள் வெளியேறினர் என்று தெரியவருகிறது.

**கவர்னர் வந்தார்**

கவர்னர் சட்டசபைக்கு வந்ததும் கம்யூனிஸ்டு கட்சியைச் சேர்ந்த ஒருவர் எழுந்து அறிக்கை ஒன்றைப் படிக்க ஆரம்பித்திருக்கிறார்; இதை சபைத் தலைவர் தடுத்திருக்கிறார். கம்யூனிஸ்டு உறுப்பினரோ தொடர்ந்து படிக்க ஆரம்பித்ததும் கூச்சல் கிளம்பியிருக்கிறது; உடனே அவரும், வேறு சிலரும் சபையிலிருந்து வெளியேறினர் என்றும் தெரிகிறது.

### கல்கத்தாவுக்கு பிரிட்டிஷ் சாமான் தூக்கிகள்

கல்கத்தாவிலுள்ள கிட்டர்பூர், ஐந்தாம் ஜார்ஜ் மன்னர் ரேவு துறைகளில் 28 சாமான் தூக்கிகளை அமைப்பதற்கு பிரிட்டிஷ் நிறுவனமொன்று ஒப்பந்தம் செய்துகொண்டிருக்கிறது.

ஒவ்வொரு சாமான் தூக்கியும் மணிக்கு 1,000 டன்கள் சரக்குகளை அப்புறப்படுத்தும் சக்தி வாய்ந்தனவாம்.

இவற்றை நிறுவ 18 மாத காலம் பிடிக்கலாம். இந்த ஒப்பந்தத்தைப் பெற பல நாடுகள் போட்டியிட்டன.

# விருத்தாசலத்தில் தி. மு. கழகத்திற்கு மகத்தான வெற்றி

## எதிர்த்த காங்கிரஸ் தோல்வி

## செல்வராஜ் தேர்ந்தெடுக்கப்பட்டார்

### கம்யூனிஸ்டு வழக்கம்போல ஜாமீன் பறிகொடுத்தார்

சென்னை, மார்ச் 19—

விருத்தாசலத்தில் நமது கழகம் வெற்றிமுரசு கொட்டியுள்ளது!

நமது அபேட்சகராக அங்கு போட்டியிட்ட எம். செல்வராஜ் அவர்கள் 11,189 வாக்குகள் பெற்று வெற்றிவாகை சூடினர்.

அவரோடு போட்டியிட்ட காங்கிரஸ் அபேட்சகரான இராஜவேலு படையாச்சி என்பார் 10,350 வாக்குகள் மட்டுமே பெற்று தோல்வி கண்டிருக்கிறார்.

அய்யாசாமி கவுண்டர் என்ற கம்யூனிஸ்டு அபேட்சகரும் தோழர் செல்வராஜ் அவர்களை எதிர்த்து நின்று ஜாமீன் பறிகொடுத்திருக்கிறார்.

போட்டியிட்ட மற்ற நான்கு சுயேச்சைகளும் ஜாமீனை இழந்துள்ளனர்.

இந்த வெற்றியுடன் சேர்த்து சட்டசபையில் நமது வீரர்களின் எண்ணிக்கை 13 ஆக உயருகிறது.

## இந்தோனேஷிய அரசியல் நெருக்கடி

### சுகர்ணோவின் திட்டம் ஏற்கப்படுமா?

*தேசீயக் கட்சியின் திண்டாட்டம்*

ஜகார்தா, மார்ச் 19—

சர்வ கட்சி மந்திரி சபை அமைப்பது, தேசீயக் கவுன்சில் ஒன்று நிறுவுவது என்ற தனது திட்டம்தான், எதிர்ப்புகள் தெரிவிக்கப்பட்டாலும் கூட இந்தோனேஷியா சிதறுண்டு போகாமல் காப்பாற்றுவதற்கு உதவ முடியும் என்று, தான் நம்புவதாக சர்வாதிகாரியாயுள்ள குடியரசுத் தலைவர் டாக்டர் சுகர்ணோ கூறியிருக்கிறாராம்.

சுகர்ணோ, தேசீயக் கட்சியின் தலைவரான சுவிர்ஜோ என்பாரை அழைத்து, மந்திரி சபை ஒன்று அமைத்து தேசீயக் கவுன்சில் நிறுவி, தோன்றியுள்ள நெருக்கடியை உறுதியாக—ஆனால் நேர்மையுடன் சமாளிக்குமாறு கடந்த வெள்ளியன்று கோரியிருப்பதும் தெரிந்ததே!

சுவிர்ஜோ இப்போது, சுகர்ணோவின் வேண்டுகோளின்படி நாட்டில் உள்ள தேசீயக் கட்சி மஸ்ஜுமி கட்சி, நஹ்ததாதுல் உலாமா, கம்யூனிஸ்டுக் கட்சி ஆகிய நான்கு பிரதான கட்சிகளுடனும் பேச்சுவார்த்தை நடத்தி வருவதாகவும் கூறப்படுகிறது.

தேசீயக் கவுன்சில் அமைப்பதை மஸ்ஜுமி கட்சி மட்டுமே பகிரங்கமாக எதிர்த்திருக்கிறதாம்.

மேலும், மந்திரி சபையில் கம்யூனிஸ்டுகளைச் சேர்த்துக்கொள்வதை பிரதான முஸ்லீம் கட்சிகளான மஸ்ஜுமி, நஹ்ததாதுல் உலாமா என்ற இரண்டு கட்சிகளும் எதிர்க்கின்றன என்றும் கூறப்படுகிறது.

"தேசீயக் கட்சியினர் தங்களின் பழைய விரோதியான மஸ்ஜுமி கட்சியினரை ஒதுக்கிவிட்டாலும், அவர்கள் கம்யூனிஸ்டுகளை மந்திரி சபையில் சேர்த்துக் கொள்வதற்கில்லை; ஏனெனில், நஹ்ததாதுல் உலாமா கட்சியினரின் ஆதரவு இருந்தால்தான் அவர்களுக்குப் 'பார்லிமெண்டரி மெஜாரிட்டி கிடைக்கும்'' என்றும் கூறப்படுகிறது.

## சென்னை சட்டசபைத் தேர்தல்

### கட்சிகள் நிலவரம்

சென்னை, மார்ச் 19—

சென்னை சட்டசபைக்கு இதுவரையில் 197 இடங்களுக்குமுடிவுகள் அறிவிக்கப்பட்டிருக்கிறது. கட்சி நிலவரங்கள் வருமாறு :—

| | |
|---|---|
| தி. மு. கழகம் | 13 |
| பி. சோ. | 2 |
| சோஷலிஸ்டு | 2 |
| சுயேச்சை | 13 |
| கம்யூனிஸ்டு | 4 |
| பார்வர்டு பிளாக் | 2 |
| கா. ஜ. க. | 16 |
| காங்கிரஸ் | 145 |

# நம் நாடு

தி.மு.க. தினஇதழ் — ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன்

சென்னை 19—3—57 செவ்வாய்


## இனவெறிக் கொடுமை ஒழிய!

'உயர்ந்தவர்களாகவே பிறந்தோம்; உயர்ந்தவர்களாகவே சாவோம்; எனவே பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும், என்று உள்ளும் மனமாற்றத்தை எங்களிடம் எதிர்பார்க்கக்கூடாது' என்ற சமூக விரோத எண்ணத்தை இந்த இருபதாம் நூற்றுண்டில்கூட தனது சமூகத்தவருக்கு இடையறாது ஊட்டுவதையும், சனாதன தர்மத்தைப் பாதுகாப்பதையுமே தனது லட்சியமாகக் கொண்டுள்ள மவுண்ட்ரோடு மகாவிஷ்ணுவான 'இந்து' இதழ்கூட, தென்னாப்பிரிக்காவில் வெள்ளை இன வெறியர்கள் ஆப்பிரிக்கரையும் இதர இன மக்களையும் அளவிலா நிறவெறிக் கொடுமைகளுக்கு ஆளாக்கிவருவதை அவ்வப்போது கண்டித்துவருகிறது.

ஆப்பிரிக்காவில் வெள்ளையரின் நிறவெறித் தாண்டவத்தைக் கண்டிக்கப் புகும் நாம், 'இந்து' இதழுக்கு இப்படி ஒரு நீண்ட அடைமொழி தருவதற்குக் காரணம் உண்டு.

'இந்து' நவீன காலத்தில் உரம் பெற்றுவரும் சமத்துவக் கோட்பாட்டிற்கு எதிராக, அது காப்பாற்ற நினைக்கும் சனாதன தர்மத்தின் பிடிப்பிலிருந்து தனது சமூகத்தில் உள்ள இன்றைய இளந்தலைமுறையினர் விடுபட்டுவிடக்கூடாது என்ற கருத்துடன் அந்தத் தர்மத்தின் மகாத்மியங்களைப் பறைசாற்றி வருவதையும், அந்தத் தர்மத்தில் தனக்கும், தான் வெளிச்சம் தந்து பிரகாசப்படுத்தும், மற்றும் சில பிற்போக்குவாதிகளுக்கும் இருக்கும் நம்பிக்கை அசைக்க முடியாதது என்று சொல்லி வருவதையும், மக்கள் நன்குணர்ந்து கொள்ளவேண்டும் என்பதற்காகத்தான், அந்த அடைமொழி.

'இந்து'க்கள் சமூகத்தில் ஒரு சாராரைத் தாழ்த்தப்பட்டவர்களாக்கி, தீண்டாமை போன்ற மனித விரோதக் கொடுமைகளை நடத்துகிறார்களே, அதேபோன்ற கொடுமைகளைத்தான் ஆப்பிரிக்கருக்கும் இதரருக்கும் வெள்ளையர் புரிகின்றனர்.

தென்னாப்பிரிக்காவில், வெள்ளையரின் இந்த அரக்கமான—மிருகத்தனமான கொடுமைகள் நாகரிக உலகின் ஒருமுகமான கண்டனத்திற்குப் பின்னும்கூட வலுத்துவருவதை நாம் காண்கிறோம்.

தென்னாப்பிரிக்க சர்க்கார், இந்தக் கொடுமைகளைத் திட்டப்படுத்தி பரவலாக்க, புதிய புதிய சட்டங்களை நாள் தவறாமல் நிறைவேற்றிவருகின்றனர்.

இப்போது, தென்னாப்பிரிக்கப் பல்கலைக் கழகங்களில் இந்த இன வேற்றுமைக் கொள்கையை அமுல் செய்ய சட்டம் கொண்டுவருகின்றதாம், தென்னாப்பிரிக்க 'ஸ்ட்ரைடம்' சர்க்கார்.

இது, ஆப்பிரிக்கருக்கும், வெள்ளையருக்கும் சமமான—ஆனால் தனித் தனியாகப் பெறவேண்டிய கல்வி வசதிகள் என்ற கொள்கையின் அடிப்படையில் கொண்டுவரப்படும் சட்டமாம்.

இதுபோன்றதொரு சட்டத்தைத்தான் அமெரிக்க உயர் நீதிமன்றம் கூடாது எனக் கண்டித்துத் தீர்ப்பு வழங்கியதும் நினைவில் கொள்ளவேண்டியதாகும்.

கல்வித் துறையில் புகுத்தப்படும் இந்த கொடிய சட்டம் இனவேற்றுமையை நிலைபெறச் செய்ய, தென்னாப்பிரிக்க சர்க்கார் மேற்கொண்டுள்ளதும் மற்றுமோர் ஏற்பாடு என்பதில் சந்தேகமே இல்லை.

மேலும், நடைமுறையில் இந்தச் 'சமமான' என்ற சொல் பெறும் பொருள், எத்தன்மைத்தாயிருக்கும் என்பதை ஆப்பிரிக்கர்களை என்றென்றைக்கும் குடியுரிமை வழங்கும் சகல சலுகைகளையும் பெறத் தகுதியற்றவர்களாக்கும் நோக்கம் கொண்ட தெ. ஆ. சர்க்காரின் 'பாண்டு கல்விச் சட்டம்' சொல்லிக்கொண்டிருக்கிறது.

பல்கலைக் கழகங்களுக்கும் இன வேற்றுமையை விஸ்தரிக்கும் சர்க்காரின் புதிய சட்டத்தை, வெள்ளையரிடையேகூடச் சிலர் — நல்ல உள்ளம் படைத்தவர்கள் கண்டித்திருக்கிறார்கள்.

மேலும், ஆப்பிரிக்க மக்களும் இதர வெள்ளையரல்லாத மக்களும், தென்னாப்பிரிக்க சர்க்காரின் இன ஒதுக்கல் கொள்கைக்கும் சட்டங்களுக்கும் எதிராக, இடைவிடாது போராடிக்கொண்டிருப்பதையும், அவர்களுக்கு உலகெங்கிலுமுள்ள விடுதலை விரும்பிகள் அனைவருடையவும் ஐ. நா.-வுடையவும் ஆதரவும் கிடைத்துவருகிறது என்பதையும் பொருட்படுத்தாமல், ஸ்ட்ரைடம் சர்க்கார், வெந்த புண்ணில் வேல் பாய்ச்சுவது போல தொடர்ந்து நிறவெறிச் சட்டங்களை இயற்றுவது, உலகின் வன்மையான கண்டனத்திற்கு உரிய ஒன்றாகும்.

கொட்டினால்தான் தேள், கொட்டாவிட்டால் பிள்ளைப்பூச்சி என்பதை உணர்ந்து, ஐ. நா. ஸ்ட்ரைடம் சர்க்காரின் மனிதகுல விரோதமான இந்த இனவெறிக் கொடுமைகளைத் தடுக்க முன்வரவேண்டும்.

இது நடைபெறவில்லையானால் இப்போது சட்டத்தின் நான்கு எல்லைகளுக்கு உட்பட்டு, உரிமைகோரிப் போராடிக்கொண்டிருக்கும் தென்னாப்பிரிக்க மக்களின் கிளர்ச்சி, வேறு உருக்கொள்ளும் என்றே எதிர்பார்க்க வேண்டியிருக்கிறது.

கண்டத்தில் உள்ள ஏனைய இன மக்களின் விடுதலை எழுச்சியும் கிளர்ச்சியும், தென்னாப்பிரிக்க மக்களுக்கு பெரும் உணர்ச்சியையும் ஊக்கத்தையும் தரும் என்பதிலும் சந்தேகமில்லை.

எனவே, ஏற்கனவே காலம் போதித்துள்ள அரிய பாடத்தைக் கற்கத்தவறி, இருந்து தவறிவிட்ட ஸ்ட்ரைடம் சர்க்காருக்கு குமுறிய எதிர்காலம் குரூரமான அனுபவங்களைத் தந்து, அந்தப் பாடத்தைப் போதிப்பதிலிருந்து ஸ்ட்ரைடம் சர்க்கார் தப்புவித்துக் கொள்ள இன்னும் காலம் தாழ்ந்துவிடவில்லை.

இன வெறியர்களே! நிறக்கொடுமை புரியும் நீசர்களே! நாகரிகம் அறியாத மனிதகுல விரோதிகளே! ஆதிக்கக்காரர்களே! அழிவு காலம் நெருங்கிவிட்டது என்ற அபாய அறிவிப்பு குமுறிக்கொண்டிருக்கும் ஆப்பிரிக்க மக்களின் உள்ளத்தில் எண்ண வடிவம் பெற்று நெடுநாட்களாகிவிட்டது. இனி, ஒலி வடிவம் பெற வேண்டியதுதான் பாக்கி.

## தென்னாட்டில் இரும்புப் படிவங்கள்

திருவண்ணாமலை, மார்ச் 16—

திருவண்ணாமலையிலிருந்து வடகிழக்கே 20 மைல் தூரத்திலும் போளூரிலிருந்து தென்கிழக்கே 12½ மைல் தூரத்திலும். தென் ஆற்காடு வட ஆற்காடு மாவட்டங்கள் சேரும் இடத்தில் சுமார் 4 சதுர மைல் பரப்பளவு உள்ள பகுதியில் இரும்பு தாதுக்கள் கலந்த கற்கள் கிடைப்பதாகக் கண்டு பிடிக்கப்பட்டு அரசாங்கத்திற்கும் அறிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், தலங்குன்றம் கிராமத்திற்கு மேற்கேயும், பூதமங்கலத்திற்கு வடக்கேயும், மன்சூராபாத், எடப்பட்டு கிராமங்களுக்கு தெற்கேயும் மூன்று சிறு குன்றுகளில் இரும்பு கலந்திருப்பதாகக் கூறப்படுகிறது.

## கேரளத்தில் அரசியல் நிலை

### சட்டத்திற்கு உட்பட்டே கம்யூனிஸ்டு ஆட்சியாம்

புதுடில்லி, மார்ச் 17—

கேரளத்தில் மந்திரி சபை அமைக்கும்படி கம்யூனிஸ்டு கட்சிக்கு பொறுப்பேற்பட்டால், இந்திய அரசியல் சட்டத்திற்கு உட்பட்டே தம் கட்சியின் அரசாங்கம் செயல்படும் என்று கேரள கம்யூனிஸ்டு தலைவரும், மத்தியக் கமிட்டி உறுப்பினருமான எம். என். கோவிந்தன் நாயர் தெரிவித்தார்.

## கொள்கையளவில் அங்கீகரித்தனராம்!

புதுடில்லி, மார்ச் 18—

1,80,000 டன் சர்க்கரையை 1957 - 58ல் உற்பத்திச் செய்யும் திட்டத்தை இந்திய சர்க்கார் கொள்கையளவில் அங்கீகரித்திருக்கின்றனராம்!

இதில் 1,50,000 சர்க்கரைகள் வியாபாரத்திற்கான நூல்களைத் தயாரிப்பதில் பயன்படுத்தப்படுமென்றும், மீதியுள்ள 30,000 - சர்க்கரைகள் பயிற்சிக்காக உபயோகப்படுத்தப்படுமென்றும் தெரிகிறது.

## இசைவாணர்களுக்கு விருது

சங்கீத நாடக வாய்ப்பாட்டுக்கு முசிறி சுப்பிரமணிய அய்யருக்கும், கர்நாடக வாத்திய சங்கீதத்திற்காக மைசூர் சௌடையாவுக்கும், பரத நாட்டியத்திற்கு ருக்மணி தேவிக்கும் இந்த ஆண்டிற்கு மக்கள் தலைவரின் விருதுகள் அளிக்கப்படும் என்று சங்கீத நாடக அகாடமி அறிவித்துள்ளது.

## பண்டிகை தந்த பரிசு?

பிகானிர், மார்ச் 18—

உடைந்திருப்பதால் 'ஹோலி' பண்டிகை கொண்டாடியபோது, ஒருவன் வீட்டுக் கூரைமீது ஏறி கூட்டத்தை நோக்கிச் சுட்டதில் 6 பேர் மரணமடைந்துள்ளனர்; 12 பேருக்குக் காயமேற்பட்டுள்ளது. இந்தச் சம்பவம் இராஜஸ்தான் மாநிலத்தில் பிகானிர் நகரத்திற்கு அருகே நடைபெற்றிருக்கிறது.

## 'இன ஒதுக்கல் பாகுபாடு நிரந்தர அடிமைத்தனத்தின் சின்னமாகும்'

## 'பல்கலைக் கழகங்கள் திறந்த மனதுடன் விளங்க வேண்டும்'

### படிப்பிலும் நிற பேதம் காண்பிப்பதற்கு எதிராக பல்கலைக் கழக மாணவர்கள் ஆர்ப்பாட்டம்

ஜோகனஸ்பர்க், மார்ச் 18—

தென்னாப்பிரிக்க அரசாங்கம் வெள்ளையர், வெள்ளையரல்லாதார் பல்கலைக் கழகம் என இன ஒதுக்கல் செய்யும் பாகுபாட்டை அமுலாக்குவதற்கு சட்டசபையில் கொண்டுவந்துள்ள மசோதாவை எதிர்த்து, ஜோகனஸ்பர்க், டர்பன் மாணவர்கள் ஆர்ப்பாட்டம் நடத்தினர்.

ஜோகனஸ்பர்க்கிலுள்ள பல்கலைக் கழக மாணவர்கள் இன ஒதுக்கலை எதிர்த்துப் போராடப் பொதுமக்களின் ஆதரவைக் கோரியுள்ளனர்.

150 வெள்ளையர் 200 வெள்ளையர் அல்லாத மாணவர்கள் டர்பன் நகரின் பெரிய கட்டிடங்களின் முன்பு மறியல் செய்தனர். 'கல்வி, இனம் கடந்தது; பல்கலைக் கழகங்கள் திறந்த மனதுடன் விளங்க வேண்டும்; இன ஒதுக்கல் பாகுபாடு நிரந்தர அடிமைத்தனத்தின் சின்னமாகும்' என்ற கருத்துக்கள் அடங்கிய சுலோகங்கள் பொருந்திய அட்டைகளை அவர்கள் தாங்கியிருந்தனர்.

பல்கலைக் கழகங்களை இன ஒதுக்கல் பாகுபாட்டின்படி பிரிக்கும் மசோதா தற்போது சட்டசபையின் முன் உள்ளது.

★

### லண்டனில் மாணவர்கள் கண்டன ஊர்வலம்

லண்டன், மார்ச் 18—

தென்னாப்பிரிக்க சர்க்காரின் நிறபேதக் கொள்கையையும், அக்கொள்கையை பல்கலைக் கழகங்களில் திணிக்கும் முயற்சிகளையும் ஆட்சேபிக்கும் முறையில் லண்டன் வீதிகளின் வழியாக சுமார் 600 பல்கலைக் கழக மாணவர்கள் ஊர்வலமாகச் சென்றனர்.

சுமார் 1,200 பல்கலைக் கழக மாணவர்கள் ஆட்சேப மனு ஒன்றில் கையெழுத்திட்டுள்ளன; இந்த மனு தென்னாப்பிரிக்க அதிகாரிகளிடம் சமர்ப்பிக்கப்படும்.

படிப்பிலும் நிறபேதம் காட்டும் தெ. ஆ. சர்க்காரின் கொள்கையை அம்மனு வன்மையாகக் கண்டிக்கிறது.

## 13 - இலட்சம் பவுன் நஷ்ட ஈடு!

அக்ரா (கானா) மார்ச் 18—

ஐரோப்பிய உத்தியோகஸ்தர்கள், கானா சுதந்திரம் பெற்றதை ஒட்டி வேலை இழப்பதால் அவர்களுக்கு நஷ்ட ஈடாக, 13,30,000 பவுனுக்கு மேலாகத் தரப்படும் என்று நிதி இலாகா அதிகாரி ஒருவர் கூறியிருக்கிறார்.

## ரஷ்யாவின் கப்பல் படை பலம்

### அதிகரித்து வருவதாகத் தகவல்

லண்டன், மார்ச் 18—

ரஷ்யாவிடம் வெளி நாடுகளுக்குத் தெரிந்த அளவில் 475 நீர்மூழ்கிக் கப்பல்கள் இருக்கின்றன என்றும், அவை ஆண்டு ஒன்றுக்கு 60 அல்லது 70 வீதம் அதிகரித்து வருகின்றன என்றும் கூறப்பட்டிருக்கிறது.

ரஷ்யாவிடம் 30 போர்க் கப்பல்கள் இருக்கின்றன என்றும், விரைவில் இவை 36 ஆக அதிகரிக்கும் என்றும், இவை யாவும் பிரிட்டிஷ் யுத்தக் கப்பல்களைவிட சற்றும் பீரங்கித் தாக்குதலைப் பிரயோகிக்கும் வல்லமையுள்ளவை என்றும் தெரிகிறதாம்.

## தற்காப்பிற்காக நடவடிக்கையாம்!

### காஜா பற்றி இஸ்ரேலின் விசித்திர வாதம்

நியூயார்க், மார்ச் 18—

"காஜா பகுதியில் எகிப்திய இராணுவத்தினர் தலைகாட்டுவது, இஸ்ரேலின் பாதுகாப்பிற்கு ஆபத்தானது,"

என்று, இஸ்ரேல் வெளிவிவகார மந்திரி ஒமிமிட்டிருக்கிறாராம்!

திருமதி கோல் டாமெயிர் என்ற அந்த மந்திரியார், காஜா தகராறு பற்றி விவாதிக்க அமெரிக்கா வந்துள்ளாராம்.

மேலும் அவர் பத்திரிகை நிருபர்களிடம் பேசுகையில், "இஸ்ரேல் தனது பாதுகாப்பிற்காக—தற்காப்பிற்காக நடவடிக்கை எடுக்க வேண்டிவரும்" என்றும் கூறியுள்ளாராம்!

## துறைமுக அபிவிருத்தி திட்டம்

### சென்னைக்குக் கிடைக்கும் உதவியின் இலட்சணம்

பம்பாய், மார்ச் 18—

இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தின்கீழ் பெரிய துறைமுகங்கள் அபிவிருத்திக்காக சுமார் ரூ. 75 கோடி செலவு செய்ய இந்தியா உத்தேசித்திருக்கிறதாம்.

மொத்தம் ரூ. 75 கோடியில் பம்பாய் துறைமுக அபிவிருத்திக்குமட்டும் ரூ. 29,30,00,000 செலவழிக்க உத்தேசிக்கப்பட்டிருக்கிறது. ரூ. 19,90,00,000 கல்கத்தாவுக்கும், ரூ. 14 கோடி கண்ட்லாவுக்கும், ரூ. 9,20,00,000 சென்னைக்கும், ரூ. 4 கோடி கொச்சிக்கும் செலவழிக்க உத்தேசமாம்!

## மனத் தெளிவு பெற மௌன விரதமாம்!

அமிர்தசரஸ், மார்ச் 15—

அகாலி தலைவர்களுக்கும் இந்திய தேசியக் காங்கிரசுக்கும் ஏற்பட்ட சமரசத் திட்டத்தை நிறைவேற்றி வைப்பதில் காங்கிரஸ் தவறிவிட்டதால் மேற்கொண்டு என்ன செய்யவேண்டும் என்பதைப் பற்றித் தீவிரமாகச் சிந்திப்பதற்கு அகாலித் தலைவர் மாஸ்டர் தாராசிங் தொடர்ந்து ஐந்து நாட்கள் மௌன விரதம் மேற்கொள்வாராம்! இந்தக் காலத்தில் சீக்கியர்களின் ஒற்றுமைக்கான வழிகளை அவர் ஆராய்வாராம்.

## இந்தியப் பேரரசின் கருணையே கருணை!

புதுடில்லி, மார்ச் 16—

சென்னை அரசாங்கத்தின் நமசிவாயபுர சேரி அபிவிருத்தித் திட்டத்தை மத்திய அரசாங்கம் ஏற்றுக்கொண்டு, ரூ. 1,19,500 மானியமாகவும், ரூ. 2,39,000 கடனாகவும் வழங்குவதற்கு முன்வந்திருக்கிறதாம்.

மாதம் ரூ. 175-க்கு மேல் வருமானம் இல்லாத சேரிகளில் வாழும் 530 குடும்பங்களுக்கு, அபிவிருத்தி செய்யப்பட்ட மனைகள் வழங்கப்படும். தக்க குடிசைகள் கட்டிக் கொள்வதற்கான சாமான்களை இந்தத் திட்டத்தின்கீழ் வழங்கப்படுமாம்.

# மலாயாவில் பயங்கரவாதிகளை ஒடுக்க பட்டினிபோடும் திட்டமாம்!

ஈபோ (வடக்கு மலாயா), மார்ச் 18—

இங்கு வாழும் சுமார் 90,000 மக்கள் மீது, இராணுவத்தினர் கடும் உணவுக் கட்டுப்பாடுகளை விதிநதுள்ளனர் என்று தெரிய வருகிறது.

இதற்குக் காரணம், இந்தப் பிரதேசத்தில் சுமார் 150 கம்யூனிஸ்டு பயங்கரவாதிகளைப் பட்டினி போடுவதின் மூலம் அவர்களை ஒடுக்க வேண்டுமென்பதுதானுல்!

இந்தப் பிரதேசத்தில் வாழும் மக்கள், வேலைக்குச் செல்லும போது தகுந்த காரணமின்றி பணமோ, உணவுப் பொருளோ எடுத்துச் செல்லக்கூடாது என்றும், யாத்திரீகர்கள் இப்பகுதிக்குள் விசேட போலீஸ் அனுமதியின்றி நுழைய முடியாது என்றும் கூறப்பட்டிருக்கிறது.

# தமிழ் நாட்டின் ரயில்வே நிலையங்கள்

## வசதிகள் செய்து தரப்படுமாம்

சென்னை, மார்ச் 18—

வண்டலூர் இரயில் நிலையத்திற்கு மின்சார வசதி அளிப்பதற்கு இரயில்வே நிர்வாகத்தினர் இசைந்துவிட்டனராம்.

நெல்லை, காரைக்குடி, திருவாரூர், கும்பகோணம் ஆகிய இரயில் நிலையங்களில் இளைப்பாறும் அறைகள் நிர்மாணிக்கப்படுமாம்.

தஞ்சை இரயில் நிலையத்தில் தகவல் அறிவிப்பு அலுவலகமும், வைத்தீசுவரன்கோயில் இரயில் நிலையத்தில் மேல்வகுப்புப் பிரயாணிகளுக்கு இளைப்பாறும் அறைகளும் கட்டப்படுமாம்.

# ஒதுக்கப்படும் தொகை தென்னாட்டிற்கும் கிடைக்குமா?

## நாட்டு வைத்திய முறைகளில் டில்லிப் பேரரசின் அக்கரை

புதுடில்லி, மார்ச் 18—

ஆயுர்வேதம், சித்தம், யூனானி போன்ற நாட்டு வைத்திய முறைகளில் ஆராய்ச்சி நடத்துவதற்காக டில்லி அரசாங்கம் ரூ. 9 இலட்சம் ஒதுக்கியுள்ளதென்றும், இந்தத் தொகை இந்த ஆண்டில் செலவிடப்படுமென்றும் தெரிய வருகிறது.

நாட்டு வைத்திய முறைகளில் ஆராய்ச்சி நடத்தும் நிலையங்களுக்கும் கல்லூரிகளுக்கும் இந்த நிதியிலிருந்து பண உதவி தரப்படும். ஆராய்ச்சித் திட்டங்களை பரிசீலிக்க ஆயுர்வேத, யூனானி, ஹோமியோபதி நிபுணர்கள் அடங்கிய 3 குழுக்களை அரசாங்க வைத்திய இலாகா நியமித்திருக்கிறது.

# சென்னை சட்டசபை இடமாற்றம்

சென்னை, மார்ச் 16—

சென்னை மாநில சட்டசபை தற்போது மவுண்ட் ரோடு அரசாங்க எஸ்டேட்டில் இயங்கி வருகிறதல்லவா?

நிர்வாகத்திற்கு வசதியாக சென்னை சட்டசபையை பழையபடியே செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள பழைய கட்டிடத்திற்கு மாற்ற அரசாங்கம் விரும்புகிறதாம்.

புதிய மாநில அமைப்புக்குப் பின்னர் கூடவிருக்கும் சட்டசபையில் 205 உறுப்பினர்களே இருப்பார்களாதலால் இந்த இடம் போதுமானது என்றும் கருதப்படுகிறது.

புதிய சட்டசபை கூடியதும் சட்டசபையை மாற்றுவது குறித்து முடிவு செய்யப்படும் என தெரியவருகிறது.

**ஆசிரியருக்குக் கடிதம் :**

## இந்திய அரசாங்கத்தின் ஏமாற்று வித்தை?

ஐயா,

சென்னை நகராண்மைக் கழகத்தார், வீட்டு வரியுடன் ரூபாய்க்கு அரையணு வீதம் நூல் நிலைய வரியும் வசூலித்து வருவது யாவரும் அறிந்ததே. வரும் ஏப்ரல் மாதத்திலிருந்து புது நாணய முறை அமுலுக்கு வருவதால், இனி, ரூபாய்க்கு 31/8 'நயா பைசா' வீதம் இவ்வரி வசூலிக்க வேண்டியதாகிறது. நகராண்மைக் கழகத்தினருக்கு இந்த அடிப்படையில் கணக்குப்போடுவது கஷ்டமாம்! ஆகையால் அவ்வரியை, 31/8 நயா பைசாவிலிருந்து 5 நயா பைசாவாக உயர்த்தப் போகிறார்களாம்! இதனுல்மேலும் சுமார் ரூ. 1,30,000 வருமானம் கிடைக்குமாம்!

புதிய முறைப்படி கணக்குப் போடுவதில் என்ன கஷ்டம் என்று உண்மையிலேயே விளங்கவில்லை. உதாரணமாக, ஒரு வீட்டின் வரி ரூ. 90 என்று வைத்துக்கொண்டால், அதன் நூல் நிலைய வரி ரூ. 2-13-0. புது முறைப்படி, இது ரூ. 2-ம், 81 நயா பைசாவுமாகிறது. இதற்கு உதவும் வகையில் அரசாங்கத்தார் வெளியிட்டுள்ள புது நாணய வாய்ப்பாடும் இருக்கிறது. அதன்படி கணக்குப்போட சென்னை நகராண்மைக் கழகத்தாராலேயே முடியாதென்றால்—அவர்களுக்கே அது கஷ்டமானதென்றால், ஏதுமறியாத அப்பாவிகளை 'ஆண்டவன்'தான் காப்பாற்ற வேண்டும்!

மேலும் தபால் இலாகா, இரயில்வே இலாகாவினரும் தங்கள் தங்கள் கட்டணத்தை இதே முறையில் அதிகரித்துள்ளனர். இதுவும் போதாதென்று சில செய்தித்தாள்களின் விலையும் கூடுதலாக அறிவிக்கப்பட்டுவிட்டது!

புதிய நாணய முறையினுல் பொதுமக்களுக்கு இடைக்காலத்தில் சில கஷ்டமேற்பட்டாலும் எவ்வித நஷ்டமும் ஏற்படாது என்று இதுவரை இந்திய அரசாங்கத்தார், மக்கள் சபையிலும் பொது மக்களுக்கு விடுத்த அறிக்கைகள் மூலமும் சினிமாப் படவாயிலாகவும் தெரிவித்ததெல்லாம் வெறும் ஏமாற்றுதானு? இருக்கும் வரிகளையே சுமக்க முடியவில்லை, மக்களால்! மேலும் மேலும் இப்படி வரிகளை உயர்த்திக்கொண்டு போவது வருந்தத்தக்கது. எனவே சென்னை நகராண்மைக் கழகத்தினரைப் போன்றவர்கள் அவசரப்படாமல், தீர ஆலோசித்து நல்ல முடிவுக்கு வருமாறு வருந்திக்கேட்டுக்கொள்கிறேன்.

காந்தாமணி
பெரியமெட், சென்னை.

# இலங்கையில் குடியேறிய தமிழர்

## குடியுரிமை வழங்கும் பிரச்சினை

### தீர்வுகாண புதிய கண்ணேட்டம் வேண்டும்

"இலங்கையில் உள்ள 'இந்தியர்'களுக்குக் குடியுரிமை வழங்கும் பிரச்சினைக்குப் பரிகாரம் காண புதியதோர் கண்ணேட்டம் தேவை,"

என்று, இலங்கை ஜனநாயகக் காங்கிரஸ் தலைவர் எ. அஜீஸ் கூறியிருக்கிறார்.

"இந்தியா, மற்றும் பாகிஸ்தான் குடியுரிமைச் சட்டம் இந்தப் பிரச்சினைகுப் பரிகாரம் காணத் தவறிவிட்டது. இந்தச் சட்டப்படி 95 சதவிகித மனுக்கள் நிராகரிக்கப்பட்டு விட்டன.

"இந்த விவகாரம் குறித்து இலங்கை காங்கிரஸ், இலங்கை ஜனநாயகக் காங்கிரஸ் ஆகியவற்றுடன்தான் பேச்சு வார்த்தைகள் நடத்தவேண்டும்.

"இந்த விவகாரத்தில், இந்திய சர்க்காரின் பங்கு என்ன என்பதை நாங்கள் அறிவோம்; ஆனுலும், பிரச்சினைக்குப் பரிகாரம் காணுவது இலங்கை சர்க்காராலும், சம்மந்தப்பட்ட மக்களாலும் தான் சாத்தியமாகும்" என்றும் அஜீஸ் கூறியிருக்கிறார்.

# 2 இலட்சம் கப்பல் துறை தொழிலாளர் வேலைநிறுத்தம்

## பிரிட்டனில் பெரும் நெருக்கடி

பிரிட்டனில் உள்ள கப்பல் கட்டும் பெரும் தொழிற்சாலைகள் முதல் சாதாரண பழுதுபார்க்கும் நிலையங்கள்வரை, அவற்றில் வேலை செய்யும் 2 இலட்சம் தொழிலாளர்கள் நேற்றுமுதல் வேலைநிறுத்தம் செய்திருப்பதால் ஸ்தம்பித்துக்கிடக்கின்றன என்று தெரிகிறது.

தொழிலாளர்கள், 10 சதவிகித சம்பள உயர்வு கோரினர்; அது மறுக்கப்படவே, வேலைநிறுத்தம் சனிக்கிழமை முதல் துவங்கியுள்ளது.

1946-ம் ஆண்டுக்குப் பிறகு இவ்வளவு பெரிய வேலைநிறுத்தம் இந்தத் தொழிலில் நடைபெற்றதில்லையாம்!

சர்க்கார் மேற்கொண்ட சமரச முயற்சியும் தோல்வியுற்றிருக்கிறது. தொழிற்சங்கத் தலைவர்கள், முதலாளிகளுடனேயே தாங்கள் நேரடிப் பேச்சு வைத்துக்கொள்ள விரும்புவதாகத் தெரிவித்துவிட்டிருக்கின்றனர்.

இந்தத் தொழிற்சாலைகளில் இப்போது சுமார் 90 கோடி பவுன் பெறுமான காண்டிராக்டுகளுக்கு தொழில் நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. இந்த நேரத்தில் வேலை நிறுத்தம் என்பது, ஏற்கனவே மேற்கு ஜெர்மனி, ஜப்பான் நாடுகளுடைய போட்டியைச் சமாளிக்கவேண்டியுள்ள பிரிட்டனின் தொழிலுக்குப் பெரும் நெருக்கடியை உண்டுபண்ணும் என்று கூறப்படுகிறது.

ஒரு வார வேலை நிறுத்தம் என்பது பல மாதங்களுக்கு தொழிலை முடக்கிவிடும் என்று கூறப்படுகிறது.

# பிரெஞ்சு ஏகாதிபத்தியத்தின் குரல் தணிகிறது!

## முழு இராணுவ பலமும் அல்ஜீரிய விடுதலைக் கிளர்ச்சியை ஒடுக்க முடியவில்லை

பிரெஞ்சு ஏகாதிபத்தியத்தின் குரல்; இப்போது தணிகிறது.

அடக்குமுறை ஒரு நாட்டு மக்களின் சுதந்திரவேட்கையைத் தணித்துவிடாது என்ற உண்மைப்படி, அடக்குமுறையின் உச்சத்தைத் தொட்டான பிறகு வழக்கம்போல எல்லா ஏகாதிபத்தியங்களும் 'குரலை'த் தணித்துக்கொள்ளும்; ஆவேசத்திலிருந்து விடுபட்டு சற்று விவேகமுடன் நடந்துகொள்ள முன்வரும். அந்த வழிப்படியே பிரெஞ்சு ஏகாதிபத்தியமும் செல்லப் புறப்பட்டிருக்கிறது.

'சண்டை நிற்க வேண்டும்; புரட்சிக்காரர்கள் அடிபணிய வேண்டும்; அப்போதுதான் அரசியல் சீர்திருத்தம் பற்றிப் பேச்சு,' என்று திமிரோடு பேசிய பிரான்ஸ், தனது முழு இராணுவ பலமும் அல்ஜீரிய விடுதலைக் கிளர்ச்சியை ஒடுக்கப்போதுமானதாயில்லை என்று கண்டான பிறகு இப்போது, 'சண்டை' நிற்காவிட்டாலும் அரசியல் சீர்திருத்தங்களை வழங்குவது என்று முடிவு செய்திருக்கிறதாம்.

அதற்கான நடவடிக்கைகளை துரிதமாக மேற்கொள்ளப் போகிறதாம்.

பிரெஞ்சுப் பிரதமர் மோலட் இதுபற்றி பலருடனும் தீவிரமான பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்டிருக்கிறாராம்!

# வடநாட்டு வியாபாரிகள் எதிர்காலம்

## மலாயாவில் மிகப் பிரமாதமாயிருக்குமாம்

### டில்லித் தூதுவர் கூறுகிறார்

சென்னை, மார்ச் 17—

"மலேயாவில் வாழுகிற இந்தியர்கள்—அவர்கள் வியாபாரிகளானுலும் தொழிலாளர்களானுலும்—முதலில் முழுமனதோடு மலேயா சர்க்காரின் சட்டங்களுக்கும், விதிகளுக்கும் உட்பட்டு நடக்க வேண்டும், இந்தியர்களின் வர்த்தகம், மலேயாவில் மிகச் சிறப்பாக இருக்கிறது. அவர்களின் எதிர்காலம் அவர்கள் கையிலேயே இருக்கிறது,"

என்று, இந்தியத் தூதுவராக கடந்த மூன்றுண்டுகளாக மலாயாவில் இருந்துவிட்டு வந்துள்ள ஆர். கே. தாண்டன் என்பார் பார் கூறியிருக்கிறார்.

மலாயா 1957 ஆகஸ்டில் சுதந்திரம் பெறும் என்றும், கடந்த 1955-ம் ஆண்டில் மலாயாவில் நடைபெற்ற தேர்தலுக்குப் பிறகே இப்போதுள்ள சர்க்கார் அமைந்தது என்றும், சுதந்திரத்திற்குப் பின்னும் 1959-ல் தேர்தல் நடைபெறும் என்றும் அவர் கூறியிருக்கிறார்.

# சரித்திரத்திற்கே பாதகம் ஏற்படுமாம்!

## ஆடம்பரப் பொருள்களை விற்க எவருக்கும் அதிகாரமில்லையாம்

ரோம், மார்ச் 18—

நாட்டைவிட்டு எகிப்துநாட்டு மன்னர் பரூக் ஓடியபோது அவருடைய அரண்மனையில் விதவிதமான பெண்களின் நிர்வாணப் படங்கள், சிலைகள், வைரம் நிரம்பிய டைகள், கோட்டுகள் கைப்பற்றப்பட்டன.

பரூக் தற்போது ரோம் நகரத்தில் இருக்கிறார். அவருடைய பொருள்களை எகிப்து அரசாங்கம் விற்பனைசெய்ய முடிவு செய்துள்ளதை அறிந்த பரூக், 'எகிப்தின் பண்டைய செல்வத்தை விற்பதால் சரித்திரத்திற்கே பாதகம் ஏற்படும்,' என்று கூறியுள்ளார். அவைகளை விற்க யாருக்கும் உரிமையில்லை என்றும், அவைகளை வாங்க யாரும் முன்வர வேண்டாம் என்றும் கேட்டுக்கொண்டுள்ளார்.

# பிலிப்பைன் தலைவர் சென்ற விமானம் விபத்துக்குள்ளாயிற்று

## அவர் உயிர் தப்பினுர் என்று சொல்வதற்கில்லை

மணிலா, மார்ச் 17—

பிலிப்பைன் நாட்டு குடியரசுத் தலைவர் ராமன் மக்ஸே ஸே சென்ற விமானம், மற்றும் 24 பிரயாணிகளுடன் செபு நகரத்தருகே மலையொன்றில் மோதி நொறுங்கிவிட்டதாகவும், அதனுல் குடியரசுத் தலைவர் உயிர் தப்பியிருப்பார் என்று சொல்வதற்கில்லை என்றும் தகவல்கள் கிடைத்துள்ளன.

விபத்திலிருந்து ஒரே ஒருவர் தான் தப்பினுர் என்றும், அவர் யார் என்பது பற்றியப் பத்திரிகை செய்திகள் வெவ்வேறு விதமாக உள்ளன என்றும் தெரிகிறது.

செபு நகரத்திலிருந்து மணிலாவிற்குப் புறப்பட்ட அந்த விமானம், செபுயன் கடல்மேல் பறந்துகொண்டிருந்தபோது செபுவிலிருந்து 10 மைல் தொலைவில் மலை ஒன்றில் மோதி நொறுங்கி எரிந்து சாம்பலானதாகச் செய்திகள் கூறுகின்றன.

# ராஜ்யங்கள் சபை உறுப்பினர்கள்

## சட்டசபைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டிருந்தால்?

### சட்டநிலை விளக்கம்

புதுடில்லி, மார்ச் 18—

ராஜ்யங்கள்சபையில் தற்போது உறுப்பினராகப் பதவி வகித்து வருபவரொருவர் மக்கள் சபைக்கோ அல்லது சட்டசபைக்கோ இப்பொழுது தேர்ந்தெடுக்கப்பட்டிருப்பின், மக்கள் சபையோ அல்லது சட்டசபையோ அமைக்கப்படும் வரையில், அவர் ராஜ்யங்கள் சபையில் உறுப்பினராகத் தொடர்ந்து பதவி வகித்து வருவாரா என்பது பற்றி விளக்கம் கோரப்பட்டுள்ளது.

ராஜ்யங்கள் சபையில் உறுப்பினராகப் பதவி வகித்து வருபவர் மக்கள் சபைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளதாக, சம்பந்தப்பட்ட மக்கள் சபை தேர்தல் தொகுதியின் தேர்தல் அதிகாரி அறிவித்தவுடனேயே சம்பந்தப்பட்ட உறுப்பினர்களின் இடங்கள் காலியாகிவிடும் என்பதே சட்டபூர்வமாகவுள்ள நிலவரமாகும்.

ராஜ்யங்கள் சபையின் உறுப்பினரொருவர் சட்டசபைக்குத் தேர்ந்தெடுக்கப்படும் சந்தர்ப்பங்களில் சம்பந்தப்பட்ட, சட்டசபைக்கு அவர் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளதுபற்றி அந்த மாநில சர்க்கார் கெஜட்டில் அறிவிப்பு வெளியான தேதியிலிருந்து பதினன்கு நாட்கள் கழிந்த பின்னர்தான் ராஜ்யங்கள் சபையில் அவருடைய இடம் காலியாகும்; ஆனுல் அவர் விரும்பினுல் அதற்கு முன்னதாக சட்டசபையில் தமது இடத்தை இராஜினுமா செய்துவிடலாம்.

## 'உதய சூரியன்'

தோழர் வெற்றிவீரன் (பொன். கு. கோதண்டபாணி) அவர்களின் துணைவியார் பவழமல்லி அவர்கள் கடந்த 19-2-57 அன்று நான்காவதாகப் பெற்றெடுத்த ஆண் மகவுக்கு 'உதய சூரியன்' என்று பெயரிடப்பட்டது. தாயும் சேயும் நலம்.

# உத்திரபிரதேசத்தில் பஞ்ச நிலையாம்!

## உறுப்பினர் ஒருவரின் கரிசனம்

உத்திரப் பிரதேச மாநிலத்தின் கிழக்குப் பகுதியில் பஞ்ச நிலை ஏற்பட்டிருப்பதாகக் கூறி, சபையை ஒத்திவைக்கவேண்டுமென நேற்று மக்கள் சபை கூடியபோது, ஷிபன்லால் சாக்சேனா என்பார் ஒரு ஒத்திவைப்புப் பிரேரணை கொண்டுவந்தாராம்!

இதனை எற்க சபைத் தலைவர் அனந்தசயனம் அய்யங்கார் மறுத்துவிட்டிருக்கிறார்.

### பஞ்சமேதும் இல்லை

இதுபற்றிப் பேசியஉணவு விவசாய இலாகா அமைச்சர் ஏ. பி. ஜெயின் கூறியதாவது:—

"உ. பி. சர்க்கார் மத்திய சர்க்காரிடமிருந்து ஏராளமான உணவுத் தானியங்களைப் பெற்றுச் சென்று குறைந்த விலைக்கு விற்றுவருகின்றனர்; ஏராளமான நியாய விலைக் கடைகள் திறந்திருக்கின்றனர்; அந்த உறுப்பினர் கூறுவதுபோன்று பஞ்சநிலை எதும் எற்பட்டுவிடவில்லை.'

இதற்கு முன்பாக, குடியரசுத் தலைவர் பேசியபின் சபையின் உறுப்பினர்கள் மூவர் காலமானதை ஒட்டி அவர்களுக்கு மரியாதை தெரிவிக்கும்வகையில் ஒரு நிமிட நேரம் மௌனம் அனுஷ்டிக்கப்பட்டது.

★★★★★★★★★★★★★★★★★★★

# வெற்றி பெற்ற கழக வீரர்கள்

**சட்டசபையில்......**

1. அண்ணா
2. அண்ணாமலை (களம்பூர்)
3. அன்பழகன் க.
4. ஆசைத்தம்பி ஏ. வி. பி.
5. இருசப்பன்
6. கருணாநிதி மு.
7. கோவிந்தசாமி ஏ.
8. சண்முகம் ப. உ.
9. சத்தியவாணிமுத்து
10. சந்தானம் எஸ்.
11. சாரதி எம். பி.
12. சுப்பிரமணியம் எா். பி.
13. செல்வராஜ் எம்.

* * *

**மக்கள் சபையில்......**

1. ஈ. வெ. கி. சம்பத்
2. தர்மலிங்கம்

(ஆதரவாளர்கள்)

3. டாக்டர் ஏ. கிருஷ்ணசாமி
4. என். சிவராஜ்

★★★★★★★★★★★★★★★★★★★

# தேர்தல் முடிவு: திரித்து வெளியிட்டாராம்!

**பத்திரிகை ஆசிரியர் கைது**

கல்கத்தா, மார்ச் 18—

பொய்யான தேர்தல் முடிவுகளை வெளியிட்டதற்காக கல்கத்தாவில் உள்ள ஒரு உருது பத்திரிகையின் ஆசிரியர், வெளியிடுபவர், அச்சடிப்போர் ஆக ஐவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

தேர்தல் முடிவுகள் சம்பந்தமாக ஒரு விசேட பதிப்பை வெளியிட்டு, அதில் முஸ்லிம் அபேட்சகர் மசமதி இஸ்மாயில், முதலமைச்சர் பி. சி. ராய் அவர்களைத் தோற்கடித்துவிட்டதாக பொய்யாகச் செய்தியை வெளியிட்டனராம்.

இதனால் நகரில் பெரிய பரபரப்பு ஏற்பட்டு, வெவ்வேறான கூட்டத்தவரிடையே தாக்குதல்களும் கலவரங்களும் ஏற்பட்டுவிட்டதாம்.

கைது செய்யப்பட்டவர்களை மார்ச் 25-ந் தேதி வரையில் ரிமாண்டில் வைக்குமாறு மாஜிஸ்திரேட் உத்திரவிட்டுள்ளார்.

## 4-கோடி இராத்தல் இந்தியப் புகையிலை

**பிரிட்டன் கொள்முதல் செய்தது**

சென்ற ஆண்டில் பிரிட்டன், சுமார் 4-கோடி இராத்தல் இந்தியப் புகையிலையைக் கொள்முதல் செய்திருக்கிறது. சமீப ஆண்டுகளில் இவ்வளவு அதிகமான அளவில் பிரிட்டன், இந்தியப் புகையிலையைக் கொள்முதல் செய்ததில்லை. சென்ற ஆண்டில் இந்தியா, பிரிட்டனிடமிருந்து 1,35,000 இராத்தல் சிகரெட்டுகளை வாங்கியிருக்கிறது.

# ஆகாசவாணி-பூமாதேவி!

**உனக்குந்தான் வெளிச்சம்**

புதுடில்லி, மார்ச் 18—

"விலைவாசிகள் ஏற்றத்தைத் தடுக்க சர்க்கார் தகுந்த நடவடிக்கைகளை மேற்கொள்வதென உறுதிபூண்டிருக்கிறார்கள்"

என்று, மக்கள் சபையில் பேசிய டாக்டர் இராசேந்திர பிரசாத் கூறினாராம்!

# சென்னை நகரில் பொதுத் தேர்தல்

## 100-க்கு 62 பேர்கள் வாக்களிக்கவில்லையாம்!

சென்னை, மார்ச் 18—

சென்னை நகரத்தில் மொத்த வாக்காளரின் எண்ணிக்கை 9,21,985 ஆகும்.

சட்டசபைக்கும், மக்கள் சபைக்கும் கடந்த 8-ந்தேதியன்று நடைபெற்ற தேர்தலில் மொத்தம் 3,54,453 பேர்களே வாக்குப் பதிவு செய்துள்ளனர்; இது, 38·4 சதவிகிதம் ஆகும்.

வாக்குகளைப் பதிவு செய்ய மொத்தம் 1,073 நிலையங்கள் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

பதிவான வாக்குகளை எண்ணி முடிய 62 மணி 50 நிமிடங்கள் பிடித்தது; அதாவது, மொத்தம் இருவாரகாலத்தில் எண்ணி முடிக்கப்பட்டது.

ஒரு உறுப்பினர் தொகுதியில் நிமிடத்திற்கு 212 வாக்குகளும் இரட்டை உறுப்பினர் தொகுதியில் நிமிடத்திற்கு 188 வாக்குகள் வீதமும் எண்ணப்பட்டுள்ளது.

தேர்தல் முடிவுகளை அறிய கூடியிருந்த பல்லாயிரக்கணக்கான மக்களிடம் ஒழுக்கமும் அமைதியும் நிலவச்செய்ய போலீஸ் இலாகா பொதுப் பேற்று பாராட்டத்தக்க முறையில் செயலாற்றியிருக்கிறது.

வாக்குகளை எண்ணுவதற்காக நியமிக்கப்பட்ட அதிகாரிகள் உற்சாகத்துடன் பணியாற்றியதும், அபேட்சகர்கள் பக்கத்துடன் பங்கு கொண்டதும் பாராட்டத்தக்கதாகும்.

ஒரே சமயத்தில் 12 வாக்குப் பதிவு நிலையங்களின் பெட்டிகளை எண்ணுவதற்குச் சட்டம் இடம் கொடுத்தும்கூட போதிய இடவசதி இல்லாததாலும், அதற்குப் பயிற்சி பெற்ற ஆட்கள் தேவைப்பட்டதாலும் ஒரே சமயத்தில் 6 நிலையங்களின் பெட்டிகளுக்குமேல் எண்ணப்படவில்லை.

மூன்று அபேட்சகர்களுக்கு அதிகமாகப்போட்டியிட்ட தொகுதிகளில் 4 அல்லது 5 நிலையங்களின் பெட்டிகளே ஒரே சமயத்தில் எண்ணப்பட்டன.

மற்ற இடங்களில் செல்லுபடியாகாத வாக்குகளின் எண்ணிக்கையை ஒப்பிட்டுப் பார்க்கும் போது, சென்னை நகரில் 803 வாக்குகளே மொத்தம் செல்லுபடியாகாதவையாக இருந்தன என்பது குறிப்பிடத்தக்கது.

இவ்விவரங்களை சென்னை நகர தேர்தல் அதிகாரி டி. பாலசுந்தரம் தெரிவித்துள்ளார்.

# நன்றியறிவிப்பு

"சென்னை சட்டசபை காஞ்சீபுரம் தொகுதியில் 4-3-57-ல் நடைபெற்ற தேர்தலில், என் வெற்றிக்காக அல்லும் பகலும் அயராது பாடுபட்ட அருமைத் தோழர்களுக்கும் பெரியோர்களுக்கும், எனக்கு ஆதரவு அளித்து வெற்றி தேடித்தந்த வாக்காளர் பெருமக்களுக்கும் என் உளங்கனிந்த நன்றிபறிதலைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

"தங்களுடைய மேலான நம்பிக்கைக்குப் பாத்திரனாகி, சென்னை சட்டசபை உறுப்பினனாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட எனக்கு, நமது தொகுதியின் நலன்களுக்காகப் பாடுபடுவதற்கான யோசனைகளைத் தந்து உதவுவதுடன், தங்கள் ஒத்துழைப்பை அளிக்கும்படி காஞ்சிபுரம் தொகுதி வாக்காளர் பெருமக்களை பணிவன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

"எப்போதும் பொதுமக்களுடன் தொடர்பு கொண்டு உண்மை ஊழியம் புரிந்து பழக்கப்பட்ட நான், காஞ்சீபுரம் தொகுதி வாக்காளர்கள் எனக்கு அளித்த ஆதரவினை என்றென்றும் மறவாது பணியாற்றி வருவேன் என உறுதி கூறுகிறேன்.

"என் வெற்றிச் செய்தியை அறிந்து, தங்கள் அன்பு கலந்த பாராட்டுகலைத் தந்தி மூலமாகவும், கடித மூலமாகவும் தெரிவித்துக் கொண்ட ஆயிரக்கணக்கான தமிழ் நாட்டுப் பெருமக்களுக்கும், இலங்கை, சிங்கப்பூர், சைகோன், பர்மா, மலேயா வாழ் தமிழர்கட்கும் என் நன்றிபறிதலைத் தெரிவித்துக் கொள்வதோடு, தமிழர்தம் பொதுவான முன்னேற்றத்துக்கான தொண்டுகளை உருவான முறையிலே செய்ய முயற்சி எடுத்துக்கொள்வேன் என்ற உறுதியையும் அளிக்கிறேன். வணக்கம்"

அன்பன்

**அண்ணாதுரை**

★

"வட சென்னை வாக்காளர் பெருமக்கள், எவர் தயவுதாட்சண்யத்திற்கும் ஆசாபாசத்திற்கும், உருட்டல் மிரட்டல்களுக்கும், பணத்திற்கும் பய முறுத்தல்களுக்கும் அஞ்சாமல், உங்கள் தொண்டனாகிய என்னை ஆதரித்து வாக்களித்த உங்கள் அனைவருக்கும், சலியாது உழைத்தவர்களுக்கும், தி. மு. கழகங்கள், மற்றும் சார்பு மன்றங்கள் அனைவற்றிற்கும் எனது இதயபூர்வமான நன்றியறிதலைத் தெரிவிப்பதோடு, என்றென்றைக்கும் தொண்டு செய்யக் கடமைப் பட்டவனாக உள்ளேன்."

அன்பன்

**என். ஜீவரத்தினம்**

★

"நான் கலந்துகொண்ட திருப்பத்தூர் பார்லிமெண்டு (மக்கள் சபை) தொகுதியிலுள்ள கழகத் தோழர்கள், தாய்மார்கள், பெரியவர்கள், ஆதரவாளர்கள், அனுதாபிகள் ஆகிய அனைவருக்கும் என் நன்றியையும் வணக்கத்தையும் செலுத்திக்கொள்வதோடு, குறிப்பாக இரவு பகலென்றும் பாராமல், பொருட் செலவையும் எண்ணாமல் எல்லாவகையான ஒத்துழைப்பையும் தந்து உதவிய கழக நண்பர்களுக்கு நான் பெரிதும் கடமைப்பட்டிருக்கிறேன்.

"வெற்றியின் இரகசியம் தோல்வியில் அடங்கியிருக்கிறது என்பதை, என் ஆறுதலுக்காக அஞ்சல்கள் எழுதிக்கொண்டிருக்கிற நண்பர்களனைவருக்கும் சொல்லிக்கொள்வதுடன், முதல் முயற்சியில் நம்மில் பலர் சட்டப்படி தோல்வியுற்றிருந்தாலும் நியாயப்படி வெற்றி பெற்றிருக்கிறோம் என்ற ஆறுதலை நண்பர்களுக்கு நான் திருப்பிச் சொல்ல வேண்டியவனாகவும் இருக்கிறேன். வணக்கம்."

அன்பன்

**சி. பி. சிற்றரசு**

★

"சென்னை சட்டசபை மதுரை மத்தியத் தொகுதியில் திராவிட முன்னேற்றக் கழக அபேட்சகனாகப் போட்டியிட்ட என்னை — (ஜாதி வெறியும் பணமும் தாராளமாக நடமாடியும்)—ஆதரித்துப் பணிபுரிந்த தொண்டர்களுக்கும் தாய்மார்களுக்கும் வாக்காளர் பொது மக்களுக்கும் என் நன்றியையும் வணக்கத்தையும் தெரிவித்துக் கொள்வதோடு, நான் பொதுக் கூட்டங்களில் சொல்லி வந்தபடி, நான் தோல்வியடைந்தாலும் பொதுமக்களுடைய தொண்டனாக தொடர்ந்து பணியாற்றுவேன் என்று தெரிவித்துக் கொள்கிறேன்."

அன்பன்

**எஸ். முத்து**

# இம்ரே நாகி

## ருஷ்யாவில் சிறைவைக்கப் பட்டிருக்கிறாராம்!

ஹங்கேரியின் பிரதமராயிருந்த இம்ரே நாகியையும் அவரது சகாக்களையும் கடந்த நவம்பர் 4-ந் தேதியன்று ருஷ்ய இராணுவத்தினர் கைது செய்தது தெரிந்ததே!

அவர்கள் சரண் புகுந்திருந்த யூகோ ஸ்லாவ் தூதுவராலயத்திலிருந்து வெளியேறியதும், தந்திருந்த உறுதி மொழிகளையும் காற்றில் பறக்க விட்டுவிட்டு ருஷ்ய இராணுவத்தினர் அவர்களை மடக்கி கைது செய்தனர் என்பதும் தெரிந்ததே!

கைது செய்யப்பட்டபின் நாகியும், இதரரும் ருமேனியாவில் சிறைவைக்கப்பட்டிருந்தனர் என்றும், இப்போது அங்கிருந்து ருஷ்ய எல்லைக்குள் கடத்திச் செல்லப்பட்டு ஒடெஸ்ஸா நகரில் சிறைவைக்கப்பட்டிருக்கின்றனர் என்றும் கூறப்படுகிறது.

இங்கேயே நாகியும் மற்றும் இதரரும், தங்கள் வாழ்வின் கடைசி நாட்களை அனுபவிக்க வேண்டியிருக்கலாம் என்றும் கூறப்படுகிறது!

# 'ஜீவாதார உரிமைகள் பாதிக்கப்படும்'

## 'சமூக முன்னேற்றத்திற்கு கெடுதலை விளைவிக்கும்'

கொழும்பு, மார்ச் 18—

சிங்களத்தை மட்டும் தேசிய மொழியாக்கி சமீபத்தில் சட்டமியற்றியதால் தமிழ் மொழி பேசும் அனைவரது ஜீவாதார உரிமைகளும் பாதிக்கப்பட்டு இருப்பதாகவும் இது சமூக முன்னேற்றத்திற்கு கெடுதலை விளைவிக்குமென்றும் இலங்கை சனநாயகக் காங்கிரசின் வருடாந்திரக் கூட்டத்தில் தீர்மானமொன்று நிறைவேற்றப்பட்டிருக்கிறது.

உடனடியாக நாடு முழுவதும் தமிழருக்கு சமத்துவம் கொடுப்பதில் சர்க்கார் காலதாமதம் செய்யக்கூடாது என்றும் கோரப்பட்டிருக்கிறது.

# மக்கள் வரிப்பணத்தை ஏமாற்றி விழுங்குகிறார்!

**காங்கிரஸ் எம். எல். ஏ. மோசடி**

பம்பாய், மார்ச் 18—

பம்பாய் சட்டசபையில் காங்கிரஸ் உறுப்பினராக இருந்த ஈசுவரபாய் கே. சாவ்டா என்பவர், கடந்த ஆண்டு மார்ச் திங்களில் சட்டசபைக்கே வரவில்லையாம். ஆனால் மேற்படி தினங்களுக்கான பிரயாணப்படி, தினப்படி ஆகியவைகளுக்கு மனுச் செய்து அவற்றைப் பெற்றுக்கொண்டாராம்.

இதைத் துப்பறியும் போலீஸ் இலாகாவினர் கண்டுபிடித்து கடந்த வெள்ளியன்று அவரைக் கைது செய்துள்ளனர். பின்னர் அவர் ரூ. 500 ஜாமீன் கொடுத்ததின்பேரில் மார்ச் 29-ந்தேதி வரையில் விடுதலை செய்யப்பட்டிருக்கிறார்.

# நெல்லையில் சர்க்கரை தொழிற்சாலை

இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தின்கீழ் சர்க்கரை உற்பத்தி முன்னேற்றத்திற்காக நெல்லை மாவட்டத்தில் கூட்டுறவு முறையில் ஒரு சர்க்கரை உற்பத்தி தொழிற்சாலை அமைக்கப்படும் என்று மாவட்ட கலெக்டர் கூறியுள்ளார்.

5,000 ஏக்கர் நிலத்தில் கரும்பு பயிரிட வேண்டியிருக்கிறதென்றும், அதற்கு முதலீடாக ரூ. 10 இலட்சம் தேவையென்றும் இந்தத் திட்டத்தைக் கொண்டுவந்தவர் குறிப்பிட்டார்.

மேற்கொண்டு தேவைப்படும் முதலீட்டை மாநில அரசும், மத்திய அரசும் அளிக்க முன்வரும் என்று நம்பப்படுகிறதாம்.

# ஆந்திரா-சென்னை எல்லைத் தகராறு

## தோற்ற மந்திரி படாஸ்கர் மீண்டும் பேச்சுவார்த்தை துவங்குவாராம்

புதுடில்லி, மார்ச் 18—

ஆந்திரா—சென்னை எல்லைத் தகராறுக்கு முடிவு காண நியமிக்கப்பட்டுள்ள மத்திய மந்திரியான படாஸ்கர், தாம் மீண்டும் சம்பந்தப்பட்ட சர்க்கார்களுடன் பேச்சுவார்த்தையைத் துவங்கப்போவதாகத் தெரிவித்திருக்கிறார்.

இன்னும் ஒரு வாரத்தில், விட்ட இடத்திலிருந்து எல்லைத் தகராறு பற்றிய பேச்சுக்கள் துவங்குமாம்.

தேர்தல்கள் முடிந்துவிட்டதால் படாஸ்கர், தாமதமின்றி பேச்சுவார்த்தைகளை முடித்துக் கொண்டு சர்க்காருக்கு தமது அறிக்கையைத் தரமுடியும் என்றும் கூறப்படுகிறது.

சென்னை சர்க்காருடன், தகராறு குறித்து ஏற்கனவே அவர் பேச்சுவார்த்தை நடத்தியாகிவிட்டதால், அவர் ஐதாராபாத் சென்று ஆந்திர சர்க்காருடன் பேசுவாராம்.

## ரூ. 17 இலட்சம் செலவில் உற்பத்தி நிறுவனங்கள்

புதுடில்லி, மார்ச் 15—

கேரளத்தில், நாடு முழுமையிலும் தொடர்ச்சியாக உற்பத்தி நிறுவனங்கள் அமைப்பது என்ற திட்டத்தின்கீழ் இரு உற்பத்தி நிலையங்களை அமைக்க இந்திய சர்க்கார் வர்த்தக உபயோகிப்புப் பொருள் அமைச்சரவை ரூ. 17 - இலட்சம் ஒதுக்கியுள்ளதென அறிவிக்கப்படுகிறது.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன் எம்.ஏ., அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று, (24. சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம், சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர் : இரா. நெடுஞ்செழியன் எம்.ஏ.